**மாகாணக் கல்வித் திணைக்களம்**
**வடக்கு மாகாணம்**
**கற்றல் கையேடு - பரதநாட்டியம்**
**தரம் 9**

---

## 1ஆம் தவணை

**1.கிராமிய வாத்தியங்களை இனங்காணுதல்**

டோல்கி, உடுக்கு, ஹார்மோனியம், சல்லாரி, நாதஸ்வரம், தவில், பறை

**2.கற்பனை வாக்கியங்களுக்கு நடனம் அமைத்தல்**

உ-ம்-

- கோயில் மணி அடித்தது
- அவள் அழகாக ஆடினாள்
- மயில் தோகை விரித்து ஆடியது
- பூந்தோட்டத்தில்அழகான பூக்கள் மலர்ந்திருக்கின்றன.
- தென்றல் காற்றில் மரங்கள் அசைந்தாடின.

**3.1.1. முத்திரை விநியோகங்களை அபிநயித்தல்**

காங்கூலம், அலபத்மம், சதுரம், பிரம்மரம்

**3.2.1.பரத அடவுகளை ஆடிக்காட்டுதல்**

- தத்தெய்தாம் அடவு -4,5,6 , தெய்தெய்திதிதெய் அடவு

**4.2.1.அடவுகளின் சொற்கட்டுகளைத் தாளக்குறியீட்டுடன் எழுதுதல்**

**தத்தெய்தாம் அடவு தாளம் - ஆதி**

1ஆம்காலம் $1_4$ 0 0

தத்,; தெய்,; தாம் ; ; ; / தத்,; தெய்,; / தாம் ; ; ; //

2ஆம்காலம்

தத்,தெய்,தாம் ; தித்,தெய்,தாம் ; / தத்,தெய்,தாம் ; / தித்,தெய்,தாம் ; //

3ஆம்காலம்

தத்தெய்தாம்தித்தெய்தாம்தத்தெய்தாம்தித்தெய்தாம் /தத்தெய்தாம்தித்தெய்தாம்/தத்தெய்தாம்தித்தெய்தாம்//

### 4.3.1. பரத எண்ணக்கருக்களை விளக்குதல்

**அடவு**

- நடனப்பயிற்சிக்குரிய நிலைகளே அடவு.
- பலஅங்க நிலைகளையும்(ஸ்தானம்) பாதஅசைவுகளையும்(சாரி) கைமுத்திரைகளையும்(நிருத்தஹஸ்தம்) கொண்டு தாளக்கட்டுடன் அமைக்கப்பட்ட செயற்பாடுகளாகும்.
- தட்டடவு முதல் மகுடஅடவு வரை பல்வேறு அடவுகள் பயிலப்படுகின்றன.

**கோர்வை**

- பலஅடவுகளின் சேர்க்கை கோர்வையாகும்.
- அடவுகள் ஒரு ஒழுங்குமுறையில் வலது,இடது சமமாக பூமாலைக்கு ஒப்பாக அமைக்கப்பட்டிருக்கும்
- முதலாம் காலத்தில் ஆரம்பித்து மூன்றாம் காலத்தில் முடிவடைய ஆக்கப்பட்டிருக்கும்.
- பாடலின் வன்மை மென்மைக்கேற்ப அடவுகள் சேர்க்கப்பட்டு இறுதியில் மகுடஅடவுடன் முடிவடையும்.

**தீர்மானம்**

- மிருதங்கச் சொற்கட்டுக்களைக் கெண்ட ஜதிகளால் ஆக்கப்பட்ட கோர்வை தீர்மானமாகும்.
- அடவுகளை அழகான, சிக்கலான அமைப்பாக்கி லயப்பிடிப்புடன் செய்யப்படுவது
- விறுவிறுப்பான ஆடல் அமைப்புக்களைக் கொண்டு மகுடஅடவுடன் முடிவடைவதாக அமையும்

**எடுப்பு**

- ஒரு தாளத்தில் பாடல்/ஜதி ஆரம்பிக்கும் விதத்தை விளக்குவது எடுப்பு/கிரஹம் எனப்படும்
- இது சமஎடுப்பு, விஷமஎடுப்பு என இரு வகைப்படும்.
- பாட்டும் தாளமும் ஒரே இடத்தில் ஆரம்பிப்பது சமஎடுப்பு
- விஷமஎடுப்பு இரு வகைப்படும். தாளம் போட ஆரம்பித்த பின் பாடல் ஆரம்பிப்பது அநாகத எடுப்பு, தாளம் ஆரம்பிக்க முன்னரே பாடல் தொடங்குதல் அதீத எடுப்பு

**முத்திரை**

- நடனத்தில் பயன்படுத்தப்படும் கைக்குறியீடு முத்திரையாகும்.
- இங்கு அழகிற்காகவும், கருத்தை வெளிப்படுத்தவும் முத்திரைகள் பயன்படுகின்றன.
- ஒற்றைக்கை, இரட்டைக்கை, அபூர்வமுத்திகைள் என இவை வகைப்படுத்தப்படுகின்றன.

**விநியோகம்**

- முத்திரைகளின் பயன்பாடே விநியோகமாகும்.
- ஓவ்வொரு முத்திரைகளையும் கொண்டு பல்வேறு கருத்துக்களை வெளிப்படுத்த பயன்படுத்தலாம் என்பதை பரதநாட்டிய சாஸ்திரத்தில் விளக்கப்பட்டுள்ளது.
- இவ்விநியோகங்களைக் கற்பதன் மூலம் பாடல்களின் கருத்திற்கேற்ப அபிநயம் ஆக்கம் செய்யமுடியும்

**சொற்கட்டு**

- நடனத்தில் பாதஅசைவுகளுக்கேற்ப தாளக்கட்டுடன் சொல்லப்படும் சொற்கூட்டம் சொற்கட்டாகும்.
- அடவுப்பயிற்சிகளின் போது கால்களின் வன்மை மென்மைக்கேற்ப தத்தகாரமாக சொல்லப்படுகிறது
- மேடைநிகழ்வுகளின் போது ஜதிகளை மிருதங்கச் சொற்கட்டுகளாக சொல்லப்படுகிறது.

**5.1.1.கலை வளர்த்த கலைஞர்களின் வரலாற்றுப்பின்னணி**

**தஞ்சை நால்வர் வாழ்க்கை வரலாறும் கலைப்பணியும்**

தஞ்சை நால்வர் பெயர் - சின்னையா, பொன்னையா, சிவானந்தம், வடிவேலு

**வாழ்க்கை வரலாறு**

- 19ஆம் நூற்றாண்டில் தஞ்சாவூரில் வாழ்ந்தனர்.
- தந்தை சுப்பராயர்.
- செங்கணார் கோயிலில் தேவாரம் பாடி, பூமாலைகட்டித் தொண்டு செய்தனர்.
- துளஜாமகாராஜாவின் ஆதரவுடன் பிருகதீஸ்வரர் ஆலயத்தில் இசை,நடனப் பணியாற்றினர். ஸ்ரீமுத்துஸ்வாமிதீட்ஷிதரைக் குருவாகக் கொண்டு இசை அரங்கேற்றம் கண்டனர்.
- "நவரத்தினமாலா"எனும் ஒன்பது வகைக் கீர்த்தனைகளை குருகுக எனும் முத்திரையுடன் குருவிற்கு காணிக்கையாக பாடினார்கள்.
- குருவும் இவர்களுக்கு சங்கீதசாகித்தியபரதசிரேட்டர்"என்னும் பட்டத்தை வழங்கி கௌரவித்தார்.
- திருவாங்கூர், மைசூர் ஆகிய சமஸ்தானங்களில் வித்துவான்களாகப் பணியாற்றினர்.
- தமக்கு கிடைக்கின்ற வருமானத்தில் தண்ணீர்ப்பந்தல்,அன்னதானம் போன்ற பணிகளில் ஈடுபட்டனர்.

**கலைப்பணி**

- பிருகதிஸ்வர இறைவன் பெயரில் கீர்த்தனைகள் இயற்றினர்.
- பல வர்ணங்கள்,தமிழ்ப்பதங்கள்,ஜாவளிகள் என்பவற்றை இயற்றினர்.
- நாட்டியத்திற்குரிய 10 வகையான ஆரம்பஅடவுகளையும் அதன் பிரிவுகளாக 120 அடவுகளை வகுத்தனர்.
- நாட்டிய உருப்படிகளை அலாரிப்பு முதல் தில்லானா வரை வகுத்து அவற்றை பல இராகங்களிலும் தாளங்களிலும் இயற்றியுள்ளனர்.
- 'சங்கீதத்திற்கு புரந்நரதாஸர் வழிகாட்டி, நாட்டியத்திற்கு என் மாணவர்கள் வழிகாட்டி" என்று அவர்களின் குரு கூறியது போல் நாட்டியத்திற்கு தற்போது நடைமுறையிலுள்ள நடனஒழுங்கமைப்பை உருவாக்கினர்.
- பல நாட்டிய நாடகங்களை தயாரித்து அரங்கேற்றினர்.

## 2ஆம் தவணை

**1.2.1.சமய கலாசார நிகழ்வுகள் பற்றி அறிதல்**

- வேட்டைத்திருவிழா - இந்துக்கோயில்களில் நடைபெறும் ஒரு திருவிழா
- கரோல் - கிறிஸ்தவர்களின் நத்தார் பண்டிகையுடன் தொடர்புடையதான ஒரு நிகழ்வு
- சூரன்போர் - கந்தசஷ்டி விரதமுடிவில் முருகன் கோயில்களில் இடம்பெறும் நிகழ்வு
- பெரஹரா – பௌத்தமதத்தவர் நிகழ்த்தும் சமய ஊர்வலம்

**2.2 பாரதியார் பாடலுக்கு நடனம் அமைத்தல்**

காக்கைச்சிறகினிலே நந்தலாலா, ஓடிவிளையாடு பாப்பா ஆகிய பாடல்கள்

**3.1.2.முத்திரை விநியோகங்களை அபிநயித்தல்**

ஹம்ஸாசியம், ஹம்ஸபக்ஷம்,சந்தம்ஸம், முகுளம், தாம்ரசூடம், திரிசூலம்

**3.2.2.பரத அடவுகளை ஆடிக்காட்டுதல்**

மண்டியடவு – 1,2 திதிதெய் அடவு

**3.3.1.ஹஸ்தங்களை அறிதலும் அபிநயித்தலும்**

**தேவஹஸ்தங்கள்**

**(தெய்வங்களைக் குறிக்கும் முத்திரைகள்)**

| | ஹஸ்தம் | வலதுகை | இடதுகை | | ஹேஸ்தம் | வலதுகை | இடதுகை |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | பிரம்மா | ஹம்ஸாசியம் | சதுரம் | 9 | மன்மதன் | கடகாமுகம் | சிகரம் |
| 2 | விஸ்ணு | திரிபதாகம் | திரிபதாகம் | 10 | இந்திரன் | திரிபதாகம் | திரிபதாகம் |
| 3 | சிவன் | திரிபதாகம் | சிம்ஹமுகம் | 11 | அக்கினி | திரிபதாகம் | காங்கூலம் |
| 4 | சரஸ்வதி | சூசி | கபித்தம் | 12 | யமன் | சூசி | தாம்ரசூடம் |
| 5 | லக்ஷ்மி | கபித்தம் | கபித்தம் | 13 | நிருதி | சகடம் | கட்வா |
| 6 | பார்வதி | பதாகம் | பதாகம் | 14 | வருணன் | பதாகம் | சிகரம் |
| 7 | விநாயகர் | கபித்தம் | கபித்தம் | 15 | வாயு | அராளம் | அர்த்தபதாகம் |
| 8 | சண்முகன் | சிகரம் | திரிசூலம் | 16 | குபேரன் | முஸ்டி | அலபத்மம் |

**நவக்ரக ஹஸ்தங்கள்**

**( 9 கோள்களையும் குறிக்கும் முத்திரைகள்)**

| | ஹஸ்தம் | வலதுகை | இடதுகை |
|---|---|---|---|
| 1 | சூரியன்(ஞாயிறு | கபித்தம் | அலபத்மம் |
| 2 | சந்திரன்(திங்கள்) | பதாகம் | அலபத்மம் |
| 3 | செவ்வாய்(அங்காரகன்/குஜஹ) | முஸ்டி | சூசி |
| 4 | புதன்(புதஹ) | பதாகம் | முஸ்டி |
| 5 | வியாழன்(பிரஹஸ்பதி/குரு) | சிகரம் | சிகரம் |
| 6 | வெள்ளி(சுக்கிரன்) | முஸ்டி | முஸ்டி |
| 7 | சனி | திரிசூலம் | சிகரம் |
| 8 | ராகு | சூசி | சர்ப்பசீர்ஷம் |
| 9 | கேது | அர்த்தபதாகம் | சூசி |

**ஜாதி ஹஸ்தங்கள்**

**(தொழில் ரீதியாக பிரிக்கப்பட்ட வர்க்கத்தைக் குறிக்கும் முத்திரைகள்)**

| | **ஹஸ்தம்** | **வலதுகை** | **இடதுகை** |
|---|---|---|---|
| 1 | பிராமணர் (அந்தணர்) | சிகரம் | சிகரம் |
| 2 | ஷத்திரியர்(அரசர்) | பதாகம் | சிகரம் |
| 3 | வைசியர் (வியாபாரி) | கடகாமுகம் | ஹம்ஸாசியம் |
| 4 | சூத்திரர் (வேளாளர்) | மிருகசீர்ஷம் | சிகரம் |
| 5 | ராட்சதர் (கொடியவர்) | சகடம் | சகடம் |

**4.2.2.அடவுகளின் சொற்கட்டுகளைத் தாளக்குறியீட்டுடன் எழுதுதல்**

- **தாஹதஜெம்தரிதா அடவு – தாளம் - சதுஸ்ரஜாதி ரூபகதாளம்**

1ஆம்காலம் 0 $1_4$

தா ; ஹ , த , / ஜெம்,; த , ரி , தா ; ; ; //

ஜெம் ,; த , ரி , / ஜெ , க , த , ரி , தெய் , ; ; ; //

2ஆம்காலம்

தா ஹ த ஜெம், த ரி / தா ; ஜெம் , த ரி ஜெ க த ரி தெய் , ; //

3ஆம்காலம்

தாஹத ஜெம் தரி தா ஜெம் தரி / ஜெகதரி தெய், தாஹத ஜெம் தரி தா ஜெம் தரி ஜெகதரி தெய், //

**5.2.1.நாட்டியநாடகங்களின் பின்னணியை அறிதல்**

- ஒரு கதையினை நாட்டியமாகவும் நாடகமாகவும் நடித்துக்காட்டுதல் நாட்டியநாடகமாகும்.
- பெரும்பாலும் புராண,இதிகாசக்கதைகளை அடிப்படையாகக் கொண்டு ஆக்கப்படுகிறது.
- இங்கு ஒன்றிற்கு மேற்பட்ட கதாபாத்திரங்கள் இடம்பெறும்
- இங்கு ஆஹார்ய, சாத்வீக அபிநயங்கள் முக்கியத்துவம் பெறுகின்றன.
- நாட்டியநாடகமானது பாத்திரங்களினூடாக பல ரஸங்களை வெளிப்படுத்துவதுடன் ரசிகர்களை ஈர்த்து வைத்திருக்கும் தன்மையும் கொண்டிருக்கவேண்டும்.
- காலத்தால் முற்பட்ட நாட்டியநாடகங்களாக குறவஞ்சி, யக்ஷகானம், பாகவதமேளா என்பனவும் இராமாயணம், மகாபாரதம், சிலப்பதிகாரம் போன்றனவும் உதாரணமாகக் கொள்ளப்படும்

# 3ஆம் தவணை

**1.31.பாடசாலையில் இடம்பெற்ற கலைநிகழ்ச்சிகளை இரசித்து விமர்சித்தல்**

**2.3.1.கிராமிய நடனத்திற்கு அபிநயம் அமைத்து ஆடுதல்**

**கரகம்** - அம்மனை வேண்டி தலையில் கரகம் வைத்து சமநிலையில் ஆடும் நடனம்

**3.1.3. முத்திரை விநியோகங்களை அபிநயித்தல்**

இரட்டைக்கை முத்திரை அஞ்சலி தொடக்கம் சகடம் வரை

**3.2.6. பரத அடவுகளை ஆடிக்காட்டுதல்**

தாஹதஜெம்தரிதா அடவு , ததிங்கிணதொம் அடவு

**3.5.1 பரத உருப்படிகளை ஆடிக்காட்டுதல்**

அலாரிப்பு முற்பகுதி அட்டமிப்பயிற்சி

**4.3.2. பரத எண்ணக்கருக்களை விளக்குதல்**

**சபை / சபையோர் இலட்சணம்**

- ஒரு மண்டபத்தில் அமர்ந்திருக்கக்கூடிய சபையோரின் பண்புகளைக் குறிக்கின்றது.
- பார்வையாளர்களின் சபையானது வேதங்களைக் கிளைகளாகவும், சாஸ்திரங்களை மலர்களாகவும், ஞானம் மிக்க அறிஞர்களை வண்டுகளாகவும் கொண்டுள்ள கற்பகவிருட்சமாகத் திகழ்கின்றது.
- ஒரு நிகழ்ச்சியின் வெற்றிக்கு கலைஞர்களுக்கு நிகரான கலையுணர்வு கொண்ட ரசிகர்கள் தேவை.

**சபாமண்டப இலட்சணம்**

- முற்காலத்தில் அரசர்களின் முன்னிலையிலேயே நடனஆற்றுகைகள் இடம்பெற்றன. அந்நிகழ்வு நடைபெறும் அரங்கம் கொண்டிருக்கவேண்டிய இலட்சணம்.
- அரங்கத்தின் வடக்குமுகத்திலேனும் கிழக்குமுகத்திலேனும் சிம்மாசனத்தின் மீது சபாபதி அமர்ந்திருப்பார்.
- சபாபதியின் இடது பக்கத்தில் அவரின் தேவியும் வலது பக்கத்தில் அமைச்சரும் அமர்ந்திருப்பர்.
- இவர்களுடன் கவியரசர்கள், புவியரசர்கள் சூழவிருத்தல் சபாமண்டபத்தின் சிறப்பாகும்.

**சபாநாயகன் இலட்சணம்**

- கலை நிகழ்ச்சிக்கு தலைமை தாங்கும் தகுதியுடையவரே சபாநாயகராவார்.
- ஸ்ரீமானாகவும் சகல சாஸ்திரம் உணர்ந்தவனாகவும் கலாசோதனை தெரிந்த நிபுணனாகவும் இருப்பார்.
- நற்குணம், தயவு, சத்தியவாக்கு, பொறுமை, கீர்த்தி, அழகு, தர்மசிந்தனை, தராதரம் அறிந்த சதுரனாகவும் காணப்படுவார்.

**கிண்கிணி இலட்சணம்**

- கிண்கிணி என்பது சலங்கை, நடனத்திற்கு அணியப்படும் சலங்கையின் இயல்பு பற்றிக் கூறுகின்றது.
- வெண்கலம், செம்பு, வெள்ளி இம்முன்றினுள் ஒன்றால் கிண்கிணி செய்யப்பட்டிருக்கம்.
- நல்ல ஒளியுள்ளதாகவம். நுல்ல வடிவினதானவும் நுண்ணிய வேலைப்பாடுடையதாகவும் நட்சத்திரங்களைக் காவல் தெய்வமாகக் கொண்டதுமான பாதசலங்கை வெண்கலத்தாலானதாகவம் ஒரு அங்கல இடைவெளி உடையதாகவும் நீலநிற நூலினால் 100 அல்லது 200 சலங்கைகளை உறுதியாகக் கட்டப்பட்டனவாக இருபாதங்களிலும் நாட்டியப்பெண் அணிந்துகொள்ளவேண்டும்.

**அலாரிப்பு இலட்சணம்**

- அலர் என்பது தமிழில் மலர்வது. தன் உடலை மலராக இறைவனுக்கு அர்ப்பணிப்பதாக அமையும்.
- பரதநாட்டியக்கச்சேரியில் முதலாவதாக ஆடப்படும் உருப்படி.
- தெய்வம்,குரு,சபையோரை வணங்குமுகமாக ஆடப்படும் தொடக்க உருப்படி.
- தாளக்கட்டுப்பாட்டிற்குள் அமைந்து கருத்தைப் புலப்படுத்தாத சுத்த நிருத்த உருப்படியாகும்
- "தாம் திதா தெய்ததெய்"என்னும் சொற்கட்டுடன் மூன்று காலங்களிலும் ஆடப்படுகிறது.
- ஐந்து ஜாதிகளிலும் அமைக்கப்பட்ட இவ்வுருப்படி நாட்டை இராகத்தில் பாடப்படுகிறது.

**4.2.2.அடவுகளின் சொற்கட்டுகளைத் தாளக்குறியீட்டுடன் எழுதுதல்**

➢ ததிங்கிணதொம் அடவு  தாளம் - சதுஸ்ரஜாதி ரூபகதாளம்

1ஆம்காலம்  0  $1_4$

த ,திங் ,கி , ண ,  / தொம்,;  த , க ,  த ,திங் ,கி , ண ,  //

தொம் ,;  த , க ,  / தி , கு , த ,திங் ,கி , ண , தொம் ,  ;  //

2ஆம்காலம்

ததிங்கிணதொம் , தக  / ததிங்கிணதொம் , தகதிகு ததிங்கிணதொம் ,  //

3ஆம்காலம்

ததிங்கிண தொம் தகததிங்கிண தொம் தக/திகுததிங்கிண தொம் ததிங்கிண தொம் தகததிங்கிண தொம்

தகதிகுததிங்கிணதொம்//

- **மண்டியடவு தாளம் - சதுஸ்ரஜாதி ரூபகதாளம்**

1ஆம்காலம் 0 1 4

தாங்கிடு தத் , த , / தின் ,ன , தாங்கிடு தத் ,த , தின் , ன , //

2ஆம்காலம்

தாங்கிடு தத்த தின்ன தாங்கிடு / தத்த தின்ன தாங்கிடு தத்த தின்ன தாங்கிடு தத்த தின்ன //

3ஆம்காலம்

தாங்கிடு தத்த தின்ன தாங்கிடு

தத்த தின்ன தாங்கிடு தத்த / தின்ன தாங்கிடு தத்த தின்ன தாங்கிடு தத்த தின்ன தாங்கிடு தத்த

தின்ன தாங்கிடு தத்த தின்ன தாங்கிடு தத்த தின்ன //

**5.3.1.இலங்கையின் பாரம்பரிய நடன கலாசாரபின்னணி**

**கண்டியநடனம்**

- மலைநாட்டு இராஜதானியாக விளங்கிய ஹரிஸ்பந்துவ, தும்பர, ஹேவாஹட்ட, உடுநுவர, யட்டிநுவர ஆகிய பிரதேசங்களில் தோன்றிய நடனம்
- கொஹோம்கங்காரிய உன்னும் சமயச் சடங்குடன் தொடர்புடையது.
- ஆரம்பத்தில் சமயச்சடங்குகளில் ஆடப்பட்டு வந்த இக்கலை தற்போது அவைக்காற்றுகைக் கலையாக உயர்ந்துள்ளது.
- வெஸ்,நையாண்டி. பந்தேரு. உடக்கி என்னும் பிரிவுகளைக் கொண்டது.
- இடுப்பு முட்டிலிருந்து கால்களை உயர்த்துதல், பாய்தல், பக்கஅசைவு. சுற்றுதல் போன்ற ஆடல்முறைகளைக் கொண்டது.
- இந்நடனம் ஆடப்படும் நிலை “மண்டிய” என்பதாகும்.
- இந்நடனத்திற்குப் பயன்படுத்தப்படும் வாத்தியம் “கட்டபெர”
- வெள்ளை சிவப்பு நிறத்திலான உடைகள், வெஸ் எனப்படும் தலைப்பாகை அணிவர்.
- வெள்ளியினால் செய்யப்பட்ட அணிகலன்களும் மணிகளாலான மார்புக் கவசமும் அணியப்படும்.

**தொகுப்பு - திருமதி ஸ்ரீதேவி கண்ணதாசன் (ஆசிரிய ஆலோசகர் மா.க.தி )**